13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

69. (i) சென்னைப் பெருநகர் திட்டப் பகுதிக்குள் அமைந்துள்ள சாத்தங்காடு இரும்பு மற்றும் உருக்கு அங்காடிப் பகுதிக்கு அங்காடிக் குழுவை ஏற்படுத்தியது குறித்தும்; (ii) சாத்தங்காடு இரும்பு மற்றும் உருக்கு அங்காடிப் பகுதிக்கான அங்காடிக் குழுவின் தலைவராக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளரையும், துணைத் தலைவராக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூத்த தலைமைத் திட்ட அமைப்பாளரையும் நியமித்தது குறித்தும்; (iii) திருவொற்றியூர் நகரமன்ற உறுப்பினர்கள் இருவரை சாத்தங்காடு இரும்பு மற்றும் உருக்கு அங்காடிப் பகுதிக்கான அங்காடிக் குழுவின் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாக நியமித்தது குறித்தும்; (iv) திருவொற்றியூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் சென்னை மாநகர காவல் கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) ஆகியோரை சாத்தங்காடு இரும்பு மற்றும் உருக்கு அங்காடிப் பகுதியின் அங்காடிக் குழுவின் அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக நியமித்தது குறித்தும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [நவ 3 (1)] துறையின் 12–6–2009 ஆம் நாளிட்ட 91 ஆம் எண் அரசாணையிலும், சென்னை பெருநகர் திட்டப் பகுதியின் உள்ளூர்ப் பகுதிக்குள் மேற்கொள்ளப்படும் மொத்த இரும்பு மற்றும் உருக்கு வணிகம் 12–6–2009 ஆம் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் சாத்தங்காடு இரும்பு மற்றும் உருக்கு அங்காடிப் பகுதியில்தான் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவித்தது குறித்தும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [நவ 3 (1)] துறையின் 12-6-2009 ஆம் நாளிட்ட 92 ஆம் எண் அரசாணையிலும் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறிப்பிட்ட பொருள்கள் விற்பனை அங்காடி (அமைவிடத்தை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1996) 67 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

70. 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (சிவில்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

2009 ஜூலை 21]

71. 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

72. 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

73. 2007–2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதி ஒதுக்கக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

74. 2007–2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

75. கடலூர் வட்டம் மற்றும் மாவட்டம், கிழக்கு இராமாபுரம், வடக்குத் தெருவைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகனான திரு. இராமலிங்கம் என்பவர் இறந்துவிட்டதற்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள், அதன் விளைவாக ஏற்பட்ட நிகழ்வுகள் குறித்து விசாரணை செய்வதற்காக 20–11–2007 அன்று நியமிக்கப்பட்ட நீதிபதி திரு. எம்.எஸ். ஜனார்த்தனம் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

76. சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசினர் சட்டக் கல்லூரி வளாகத்தில் 12–11–2008 அன்று அக்கல்லூரியின் இரு மாணவர் பிரிவினரிடையே ஏற்பட்ட வன்முறைச் சம்பவம் தொடர்பான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட நீதியரசர் திரு. ப. சண்முகம் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)